[2018] 1 எஸ்சிஆர் 102

ஹிமாச்சல பிரதேச மாநிலம்

-எதிர்-

ராஜ் குமார்

(மேல்முறையீடு எண்.31/2018)

ஜனவரி 08, 2018

மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர். பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

தண்டனைச் சட்டம், 1860 - பிரிவுகள் 302, 201 உடனிணைந்த பிரிவு 34 - சூழ்நிலைச் சாட்சியத்தின் அடிப்படையிலான வழக்கு - இறந்தவர், அ.சச-1 (மகன்) அ.சா-2 (மகள்) மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட-எதிர்மேல்முறையீட்டாளர் (மைத்துனர்) உடன் வசித்து வந்துள்ளார் - அந்த விதிவசமான இரவில், எதிர்மேல்முறையீட்டாளரால் அடிக்கப்பட்டு இறந்தவரின் கூக்குரலை அ.சா-1 கேட்டுள்ளார் மற்றும் அவர் அவளை வேறொரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிற்கு கூட்டிச் சென்றார் - பின்னர், இறந்தவரின் உடை ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது காணப்பட்டது - விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு குற்றத் தண்டனை வழங்கியுள்ளது - அ.சா-1, அவரது வாக்குமூலத்தில் மாற்றங்கள் செய்ததால் நம்பகமான சாட்சி இல்லை என்ற காரணத்தின்பேரில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் மேல்முறையீட்டினை உயர்நீதிமன்றம் அனுமதித்தது - முடிவு : அரசுத்தரப்பு வழக்கு சூழ்நிலைச்சான்றின் அடிப்படையில் அமைந்தது - தற்போதைய வழக்கில் அரசுத்தரப்பு சார்ந்துள்ள சூழ்நிலைகள் உறுதியான

மற்றும் ஒட்டுமொத்த நம்பத்தகுந்த சாட்சியமாக திரண்டு, எதிர்மேல்முறையீட்டாளரை தவிர வேறு எவராலும் கொலை புரியப்படவில்லை எனக் குறிப்பிட்டும் ஒட்டுமொத்த சங்கிலித் தொடர் சூழ்நிலையாக அமைந்துள்ளது - மேலும், அ.சா-1-ன் சாட்சியம் உறுதியானது, இயற்கையான மற்றும் அரசுத்தரப்பு வழக்குடன் ஒத்துப்போகிறது - கூறப்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில், அ.சா-1-ன் நம்பத்தகுந்த சாட்சியத்தை கட்டற்ற ஐயப்பாட்டினால், உயர்நீதிமன்றம் மறுத்துரைத்தது - எதிர்மேல்முறையீட்டாளரை விடுதலை செய்த உயர்நீதிமன்றத்தின் வாதங்கள் நிலைநிறுத்தத்தக்கதல்ல - விசாரணை நீதிமன்றத்தால் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு உறுதியாகிறது.

சாட்சிய சட்டம், 1872 - பிரிவு 106 - உண்மையைநிரூபிக்க வேண்டிய பொறுப்பு, குறிப்பாக அறிந்ததற்குட்டபட்டது - இறந்தவர் அவரது 2 குழந்தைகளுடனும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளருடனும் (மைத்துனர்) வசித்து வந்துள்ளார் - அந்த விதிவசமான நாளில், அவரை, மற்றொரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டுக்கு அழைத்து செல்வதற்கு முன்பு மரணமுற்றவரை எதிர்மேல்முறையீட்டாளர் அடித்துள்ளார் - பின்னர், மரணமுற்றவரின் உடல் ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது - முடிவு : பிரிவு 106-ன்படி, மரணமுற்றவர் எவ்வாறு இறந்தார் என்பதற்கு நம்பத்தகுந்த விளக்கத்தை தரவேண்டிய பொறுப்பு வீட்டில் உடன் வசிக்கும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உள்ளது - மரணமுற்றவர் காணாமல் போனதை குறித்து ஏன் காவல்துறையினரிடம் தெரிவிக்கவோ அல்லது புகார் அளிக்கவோ இல்லை என்பதற்கு நியாயமான விளக்கம் ஏதும் அவர் அளிக்கவில்லை - அவரது அறிவுக்கு

எட்டியிருந்தும், அந்த உண்மையை வெளிச்சம் இட்டு காட்டாமல், எந்த விளக்கமும் அவர் தரத் தவறியது, அவருக்கேதிரான சூழ்நிலையாக உள்ளது.

குற்றவியல் சட்டம் - கடைசியாக பார்த்தல் எனும் கோட்பாடு - மரணமுற்றவர் கடைசியாக குற்றஞ்சாட்டப்பட்டவருடன் உயிருடன் காணப்பட்டார் - குற்றஞ்சாட்டப்பட்டவர், மரணமுற்றவர் காணாமல் போனதை குறித்து திருப்திகரமான விளக்கம் அளிக்கவில்லை - முடிவு : இதுவே அவருக்கெதிரான வலுவான சூழ்நிலை - இறந்து போனவர், அதே வீட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் வசித்துள்ளார், அவர் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் கடைசியாக உயிருடன் காணப்பட்டார், மரணமுற்றவர் எவ்விதம் இறந்தார் என்பதை அவர்தான் விளக்க வேண்டும்.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1.1. அரசுத்தரப்பு வழக்கானது சூழ்நிலைச் சான்றை அடிப்படையாகக் கொண்டது. சூழ்நிலைச் சான்றினை அடிப்டையாகக் கொண்ட வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நோக்கி, தவறில்லாமல் தன்மையைக் கொண்ட முடிவாய் அந்த சூழ்நிலைகள் இருக்கவேண்டும் மற்றும் குற்றத்தினை முடிவு செய்யப் பெறப்படும் ஊகங்களுக்கான சூழ்நிலைகள் பலமாக மற்றும் உறுதியாக நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்டதாகும். மேலும் எல்லா சூழ்நிலைகளும் ஒரு சங்கிலித் தொடராக அமைய வேண்டும் மற்றும் சாட்சியத்தின் தொடரில் எந்த இடைவெளியும் இருத்தல் கூடாது. மேலும் நிருபிக்கப்பட்ட சூழ்நிலைகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற கருதுகோளுடன் ஒத்திருக்க வேண்டும் மற்றும் அவரது அறியாமையிலிருந்து முழுதும் ஒத்துப்போகாதிருக்க வேண்டும்.

1.2. மீனா தேவி அவளது மைத்துனர்/குற்றஞ்சாட்டப்பட்டவருடன், அவரது குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். அவ்விதம் மீனா தேவி காணாமல் போயிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் இயற்கையான நடவடிக்கை காவல்துறைக்கும், அ.சா-3-விற்கும் தெரிவிப்பதுதான். அது நடைபெறவில்லை. இ.த.ச., 1872, பிரிவு 106-ன்படி, இறந்தவர் எவ்விதம் இறந்தார் என்பதற்கு வீட்டில் வசிப்பவர் என்பதால் தெளிவான விளக்கம் தர வேண்டிய பொறுப்பு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உள்ளது. அவர் ஏன் காவல்துறையினரிடம் மீனா தேவி காணாமல் போனது குறித்து புகார் அளிக்கவில்லை அல்லது தெரிவிக்கவில்லை என்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து எந்த விளக்கமும் வரவில்லை. அந்த வீட்டில் வசிப்பவரான எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர், சாதாரணமாகவும், அமைதியாகவும் மற்றும் விளக்கம் தராமலும் இருக்கமுடியாது. அந்தக் குற்றம் நடந்ததற்கு அவர் பொறுப்பானவர் என்பதை எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராகக் காட்டும் வலுவான சூழ்நிலை உள்ளது.

2. அவர், இறந்துபோனவரிடம் சண்டையிட்டுள்ளார் மற்றும் இறந்து போனவரைத் தாக்கியுள்ளார் என்பது குற்றஞ்சாட்டப்பட்டவரின் உள்நோக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. அ.சா-15-ன் சாட்சியம் மூலம் கூறப்பட்டது உயர்நீதிமன்றத்தால் சரிவர பார்க்கப்படவில்லை.

3. இறந்துபோன மீனா தேவியின் மகனான ஜீவன் லால் (அ.சா-1) அவருடனும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருடனும் ஒரே வீட்டில் இருந்துள்ளனர் மற்றும் நிகழ்வு குறித்து பேசும் இயல்பான சாட்சியாவர். அ.சா-1-ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாகவும், இயல்பானதாகவும் உள்ளது மற்றும் அரசுத் தரப்பு வழக்குடன் ஒத்துப்போகிறது. சில கூடுதல் விரிவாக்கம் உள்ளது எனக் கருதி, கூறப்பட்ட விரிவாக்கம் காரணமாக அ.சா-1-

ன் சாட்சியத்தை உயர்நீதிமன்றம் சந்தேகித்தது சரியல்ல. இறந்தவருக்கு என்ன நேர்ந்தது என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் விளக்க வேண்டும்.

4. அதே வீட்டில் இறந்துபோனவருடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் வசித்து வந்ததால் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் கடைசியில் உயிரோடு பார்த்துள்ளதால், இறந்து போனவர் எவ்விதம் இறந்தார் என்பதை அவர்தான் விளக்க முடியும். இறந்தவரின் உடல் மரத்திலிருந்து தொங்கியது எப்படி என்பது குறித்து எந்த விளக்கமும் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் இல்லை.

ராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- காசி ராம் (2006) 12 **எஸ்சிசி** 254 : [2006] 8 **சப்ளி. எஸ்சிஆர்** 501 – **சார்வுறப்பட்டது.**

5. தற்போதைய வழக்கில், அரசுத் தரப்பு நம்பியிருக்கும் சூழ்நிலைகள் உறுதியான மற்றும் நம்பகமான ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த கொலை குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் செய்யப்பட்டது, வேறு யாரும் செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டும் சூழ்நிலைகள் ஒட்டுமொத்தமாக ஒரு முழுமையான சங்கிலித் தொடரை உருவாக்குகின்றன.

திரிமுக் மரோத்தி கிர்கான் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் (2006) 10 **எஸ்சிசி** 681: [2006] 7 **சப்ளி. எஸ்சிஆர்** 156; கணேஷ் லால் -எதிர்- ராஜஸ்தான் மாநிலம் (2002) 1 **எஸ்சிசி** 731 : [2001] 4 **சப்ளி. எஸ்சிஆர்** 619; மகாராஷ்டிரா மாநிலம் -எதிர்- சுரேஷ் (2000) 1 **எஸ்சிசி** 471 : [1999] 5 **சப்ளி. எஸ்சிஆர்** 215; தமிழ்நாடு மாநிலம் -எதிர்- ராஜேந்திரன் (1999) 8 **எஸ்சிசி** 679 : [1993] 3 **சப்ளி. எஸ்சிஆர்** 89 – **சார்வுறப்பட்டது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2006] 7 சப்ளி. எஸ்சிஆர் 156	**சார்வுறப்பட்டது**	**பத்தி 10**
[2006] 8 சப்ளி. எஸ்சிஆர் 501	**சார்வுறப்பட்டது**	**பத்தி 10**
[2001] 4 சப்ளி. எஸ்சிஆர் 619	**சார்வுறப்பட்டது**	**பத்தி 10**
[1999] 5 சப்ளி. எஸ்சிஆர் 215	**சார்வுறப்பட்டது**	**பத்தி 10**
[1993] 3 சப்ளி. எஸ்சிஆர் 89	**சார்வுறப்பட்டது**	**பத்தி 10**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.31/2018.

சிம்லாவிலுள்ள ஹிமாச்சல பிரதேச உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண்.559/2008-இல் 19.08.2014 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக - டி.கே. தாக்கூர், கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர், ஷாரிக் அகமது, வரிந்தெர் குமார் சர்மா.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக - ஜோஸ் ஆபிரகாம், ருச்சிர் பத்ரா.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர்.பானுமதி அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இம்மேல்முறையீடானது, விசாரணை நீதிமன்றத்தால் எதிர்மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நீக்கறவு செய்து இ.த.ச., பிரிவு 302, குற்றவியல் மேல்முறையீடு எண்.559/2009-இல் எதிர்மேல்முறையீட்டாளரை விடுதலை செய்து ஹிமாச்சல பிரதேச

உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இறந்துபோன மீனாதேவியின் கணவர், சம்பவத்திற்கு சுமார் 11 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மீனா தேவி, அவருடைய மகன் ஜீவன் லால் (அ.சா-1), மகள் ரேகா தேவி (அ.சா-2) மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ்குமாருடன் (மைத்துனர்) வசித்து வந்தார். 23.08.2007 அன்று மாலை 8.30 மணிக்கு, அவரது குடும்பத்துடன் மீனா தேவி உணவு உட்கொண்டிருந்தபோது, எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர் குடித்துவிட்டு வந்துள்ளார் மற்றும் எந்தக் காரணமுமின்றி மீனா தேவி மற்றும் அவரது குழந்தைகளை அ.சா-1 மற்றும் அ.சா-2-யும் திட்ட ஆரம்பித்துள்ளார் மற்றும் அவர்களைக் கொல்வதாகவும் மிரட்டியுள்ளார். அப்போது வீட்டில் இருந்த அ.சா-1-ன் பாட்டியான பர்ஃபி தேவி, ஜீவன் லாலை (அ.சா-1) அருகிலுள்ள தூங்கும் அறைக்கு அழைத்துச் சென்று, அந்த அறையின் வெளிப்புறம் பூட்டிவிட்டார். அவளது தாய் வழி மாமா அனந்த் ராம் (அ.சா-3)-ன் வீட்டிற்கு இறந்து போனவரின் மகளான ரேகா தேவியை (அ.சா-2) செல்லுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அறையின் உள்ளே இருக்கும்போது, அவரது தாயார் மீனா தேவியின் கூக்குரலை அ.சா-1 கேட்டுள்ளார், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மற்றொரு நபரான ஓம் பிரகாஷ்-ன் வீட்டிற்கு அவரது தாயை, குற்றஞ்சாட்டப்பட்டவர் - எதிர்மேல்முறையீட்டாளர் அழைத்துச் சென்றதை ஜன்னல் வழியே பார்த்துள்ளார். சில மணிநேரம் களைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் கதவைத் திறந்து, அவரது தாய் வீட்டிலிருந்து ஓடிவிட்டார் என்றும், அதனை அவரது தாய்வழி மாமா அனந்த் ராம் (அ.ச-3)-மிடம் கூறவேண்டும் என்று சொல்லியுள்ளார். எதிர்மேல்முறையீட்டாளர் -

குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் மற்றொரு குற்றஞ்சாட்டப்பட்டவர் ரமேஷ் குமார் ஆகியோரிடமிருந்து அத்தகைய அச்சுறுத்தலின்பேரில், அ.சா-1 அவரது தாய்வழி மாமாவிடம் (அ.சா-3) அவரது தாய் வீட்டலிருந்து ஓடி விட்டார் எனக் கூறியுள்ளார். 24.08.2007 அன்று காலை சுமார் 2.00 மணிக்கு அனந்த் ராம் (அ.சா-3) குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிற்கு வந்தார். அதன் பின்னர், அ.சா-1 மற்றும் அ.சா-3 தரம்பூர் காவல் நிலையத்திற்கு சென்று மீனா தேவி காணாமல் போனதை காவல்துறையினரிடம் தெரிவித்தார். 25.08.2007 அன்றும் அவர்கள் மீண்டும் தரம்பூர் காவல்நிலையத்திற்கு சென்றனர்,காலை சுமார் 11.00-11.30 மணிக்கு, அனந்த் ராம் கட் பஹு காட்டில் ஒரு மரத்தில் இறந்துபோன மீனா தேவியின் உடல் தொங்கிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்து நெக் ராமிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பைப் பெற்றுள்ளார்.அதன்பின்னர், காவல்துறையினருடன், அ.சா-1 மற்றும் அ.சா-3 அந்த இடத்திற்கு சென்று, அங்கு அவளது கழுத்தைச் சுற்றி பிளாஸ்டிக் கயிற்றினால் கட்டப்பட்டு பைன் மரத்தின் கிளையில் மீனா தேவியின் சடலம் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டனர். அ.சா-1-ன் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில்இ.த.ச., பிரிவு 302 மற்றும் பிரிவு 201 உடனிணைந்த பிரிவு 34-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை எண்/250/2007 பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. ஆரம்பகட்ட புலன் விசாரணை சார் ஆய்வாளர், சட் பிரகாஷ் (அ.சா-20) மற்றும் மேல் விசாரணை ஆய்வாளர் எல்.ஆர்.தாகூர் (அ.சா-22) ஆகியோரால் நடத்தப்பட்டது. அ.சா-22 சம்பவ இட வரைபடம் தயாரித்து, பிரேத விசாரணை மேற்கொண்டு மேல் விசாரணை நடத்தினார். மருத்துவர். விவேக் பன்யால் (அ.சா-24) சடலக்கூராய்வு செய்துள்ளார் மற்றும் " ..... மண்ணீரல் பிளவினால் ஏற்பட்ட

இரத்தப்போக்கு அதிர்ச்சியால் மரணம் ஏற்பட்டது என்றும், பரிசோதனைக்கு முன்னுள்ள காயங்கள் வாயை அடைத்ததால் ஏற்பட்டது. சடலக்கூராய்வு தூக்கிலிடப்பட்டார் என்று குறிப்பிடுகிறது." குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ் குமார் 25.08.2007 அன்று விசாரணைக்காக பாதுகாப்பில் எடுக்கப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் 27.08.2007 அன்று பதிவு செய்யப்பட்டது. அதன்மூலம், குற்றஞ்சாட்டப்பட்ட ரமேஷ் குமாரின் கட்டுமானத்தில் உள்ள வீட்டிலிருந்த அறையில் மகளிர் சட்டை கைப்பற்றப்பட்டதாக தெரிகிறது. விசாரணை முடிந்த பிறகு இ.த.ச., பிரிவு 302, பிரிவு 201 உடனிணைந்த பிரிவு 34-ன்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ் குமார், ரமேஷ் குமார், ஓம் பிரகாஷ், பர்ஃபி தேவி ஆகியோர் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டன.

5. குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை வெளிக்கொணர, அமர்வு நீதிமன்றத்தில், அரசுத்தரப்பால் அதிகமாக இருபத்து நான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. கு.ந.ச., பிரிவு 313-ன்கீழ், வினா எழுப்பியபோது, குற்றஞ்சாட்டப்பவர், குற்றத்தில் சிக்கவைக்கும் சூழ்நிலைகளையும், சாட்சியங்களையும் மறுத்து மற்றும் அவர் ஏதும் அறியாதவர் என வாதுரைத்துள்ளார். இறந்துபோன மீனா தேவியின் இறப்பின் மீது குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்த விளக்கமும் தரவில்லை.

6. அனந்த் ராம் (அ.சா-3) மற்றும் பிந்த்ரா தேவி (அ.சா-15)-ன் சாட்சியங்களின் அடிப்படையில், அவரது மைத்துனரால் (எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர்) மீனா தேவி துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளார் என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. இறந்துபோனவரின் மகன் (அ.சா-1) ஜீவன் லால், இறந்துபோனவரை குற்றஞ்சாட்டப்பட்டவர் பகிங்கரமாக அடித்ததையும்,

வீட்டிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் மீனா தேவியை அழைத்துச் சென்றதாக கூறியுள்ளார் என விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. இறந்துபோன மீனா தேவியின் கூட்டாக வாழ்ந்து வந்துள்ள எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து எந்த விளக்கமும் பெறவில்லை என விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அந்த முடிவில், விசாரணை நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச., பிரிவு 302 மற்றும் பிரிவு 201 உடனிணைந்த பிரிவு 34-ன்கீழ் தண்டனையும் மற்றும் ஆயுள் தண்டனை வழங்கியும் உத்தரவு பிறப்பித்துள்ளது. பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ரமேஷ் குமார் மற்றும் ஓம் பிரகாஷ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குற்றஞ்சாட்டப்பட்ட பர்பி தேவி தலைமறைவாகியுள்ளார்.

7. குற்றஞ்சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், இறந்தவரின் மகன் ஜீவன் லால் (அ.சா-1) முழு சம்பவத்தையும் விவரிப்பதில் நீதிமன்றத்தில் சாட்சியாக சாட்சியமளித்ததில் அ.சா-1 நம்பகமான சாட்சி அல்ல என்றும் உயர் நீதிமன்றம் கருதியுள்ளது. பிரச்சனை தொடர்பாக வெற்று கூற்றுகள் இருந்ததாகவும், ஆனால் இறந்துபோன மீனா தேவியின் கொலை குற்றஞ்சாட்டப்பட்டவரால் நடந்ததற்கான எந்த குறிப்பான உள்நோக்கமும் இல்லை என உயர்நீதிமன்றம் மேலும் முடிவு செய்துள்ளது. அரசுத் தரப்பு வழக்கின் உறுதியற்ற தன்மையை கவனித்த உயர் நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த குற்றவியல் மேல்முறையீட்டை அனுமதித்து, அவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை மற்றும் தண்டனையை நீக்கறவு செய்தது. மனக்குறையுற்ற மாநில அரசு எங்கள் முன் உள்ளது.

8. தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம் மற்றும் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் பதிவுருக்களில் உள்ள சான்றுகளையும் பார்வையிட்டோம்.

9. அரசுத்தரப்பு வழக்கானது சூழ்நிலைச் சான்றை அடிப்படையாகக் கொண்டது. சூழ்நிலைச் சான்றினை அடிப்டையாகக் கொண்ட வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நோக்கி, தவறில்லாமல் தன்மையைக் கொண்ட முடிவாய் அந்த சூழ்நிலைகள் இருக்கவேண்டும் மற்றும் குற்றத்தினை முடிவு செய்யப் பெறப்படும் ஊகங்களுக்கான சூழ்நிலைகள் பலமாக மற்றும் உறுதியாக நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்டதாகும். மேலும் எல்லா சூழ்நிலைகளும் ஒரு சங்கிலித் தொடராக அமைய வேண்டும் மற்றும் சாட்சியத்தின் தொடரில் எந்த இடைவெளியும் இருத்தல் கூடாது. மேலும் நிருபிக்கப்பட்ட சூழ்நிலைகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற கருதுகோளுடன் ஒத்திருக்க வேண்டும் மற்றும் அவரது அறியாமையிலிருந்து முழுதும் ஒத்துப்போகாதிருக்க வேண்டும்.

10. எல்லா குற்றச்சாட்டு உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் அறியாமையோடு பொருந்ததாகக் காணப்பட்டால் மட்டுமே குற்றத்தின் ஊகிப்பை அடையலாம். திரிமுக் மரோத்தி கிர்கான் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் (2006) 10 எஸ்சிசி 681 என்ற வழக்கில், கீழ்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது :

> "12. குற்றத்தின் ஊகம் அடைவதற்குரிய சூழ்நிலைகள் பலமாக மற்றும் உறுதியாக நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும்; குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நோக்கி பிழையின்றி நிச்சயமான போக்கில் அந்த

சூழ்நிலைகள் இருத்தல் வேண்டும்; சூழ்நிலைகள் ஒட்டுமொத்த சங்கிலித்தொடராக குவிந்து முழுவதுமாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவரால் குற்றம் எல்லா மனித சாத்தியக்கூறுகளால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவிலிருந்து தப்பிக்க வழியின்றி இருத்தல் வேண்டும் என்பது சூழ்நிலை சான்றுகளின் அடிப்படையில் உள்ளதற்கான சாதாரணக் கொள்கையாகும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் தவிர பிற கருதுகோளில் தகுதியற்ற விளக்கமாகவும் மற்றும் அவர்களது அறியாமையோடு ஒத்துப்போகாமலும் இருக்க வேண்டும்."

அதே வகையான கோட்பாடு, ராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- காசி ராம் (2006) 12 எஸ்சிசி 254, கணேஷ் லால் -எதிர்- ராஜஸ்தான் மாநிலம் (2002) 1 எஸ்சிசி 731; மகாராஷ்டிரா மாநிலம் -எதிர்- சுரேஷ் (2000) 1 எஸ்சிசி 471; தமிழ்நாடு மாநிலம் -எதிர்- ராஜேந்திரன் (1999) 8 எஸ்சிசி 679 : [1993] 3 சப்ளி. எஸ்சிஆர் 89 என்ற வழக்குகளில், சார்வுறப்பட்டுள்ளது.

11. அவரது கணவன் இறந்த பிறகு, மீனா தேவி, அவரது குழந்தைகளான ஜீவன் லால் (அ.சா-1) மற்றும் ரேகா தேவி (அ.சா-2) ஆகியோருடன் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ்குமாருடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்துள்ளார். அவர்களது சாட்சியத்தில், 23.08.2007 அன்று எதிர்மேல்முறையீட்டாளர் குடித்துவிட்டு வந்ததாகவும், அவர்களை கொன்றுவிடுவதாக மிரட்டியதாகவும் அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர் தெளிவாகக் கூறியுள்ளனர். இறந்துபோன மீனாவின் மகனான ஜீவன் லால் (அ.சா-1), அவரது தாயின் கூக்குரலை கேட்டதாகவும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட ஓம் பிரகாஷ் வீட்டை நோக்கி அவரது தாயை குற்றஞ்சாட்டப்பட்டவர் அழைத்துச் சென்றதைப் பார்த்ததாகவும்

தெளிவாகக் கூறியுள்ளார். 25.08.2007 அன்று அருகிலுள்ள காட்டில் பைன் மரத்தில் மீனா தேவியின் உடல் தொங்கிக்கொண்டிருந்தது காணப்பட்டுள்ளது. சடலக் கூராய்வு செய்த அ.சா-24-ஆன மருத்துவர் விவேக் பன்யால், பரிசோதனைக்கு முன்னுள்ள காயங்கள் தொண்டை அடைப்பால் ஏற்பட்டுள்ளது மற்றும் உடல் தொங்கும் நிலை பின் பரிசோதனை நிலை எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

12. அவரது சாட்சியத்தில், ஜீவன் லால் (அ.சா-1) மீனா தேவி வீட்டிலிருந்து ஓடிவிட்டார் என தாய்வழி மாமா அனந்த் ராம் (அ.சா-3)-இடம் தொலைபேசியில் கூறுமாறு குற்றஞ்சாட்டப்பட்ட ஓம் பிரகாஷ் அவரை அச்சுறுத்தியாகத் தெரிவித்துள்ளார் மற்றும் அத்தகைய அச்சுறுத்தலால், ஜீவன் லால் (அ.சா-1) அவ்வாறு அனந்த் ராமிடம் (அ.சா-3) தெரிவித்துள்ளார். 24.08.2007 அன்று அதிகாலை 2.00 மணியளவில் அனந்த் ராம் (அ.சா-3) கிராமத்திற்கு வந்த பிறகு, அ.சா-1, மற்றும் அ.சா-3 தரம்பூர் காவல்நிலையத்திற்குச் சென்று மீனா தேவி காணாமல் போனது குறித்து தெரிவித்துள்ளார். மீனா தேவி அவளது மைத்துனர்/குற்றஞ்சாட்டப்பட்டவருடன், அவரது குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். அவ்விதம் மீனா தேவி காணாமல் போயிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் இயற்கையான நடவடிக்கை காவல்துறைக்கும், அ.சா-3-விற்கும் தெரிவிப்பதுதான். அது நடைபெறவில்லை. இ.த.ச., 1872, பிரிவு 106-ன்படி, இறந்தவர் எவ்விதம் இறந்தார் என்பதற்கு வீட்டில் வசிப்பவர் என்பதால் தெளிவான விளக்கம் தர வேண்டிய பொறுப்பு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உள்ளது. அவர் ஏன் காவல்துறையினரிடம் மீனா தேவி காணாமல் போனது குறித்து புகார் அளிக்கவில்லை அல்லது தெரிவிக்கவில்லை என்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து எந்த விளக்கமும் வரவில்லை. அந்த வீட்டில் வசிப்பவரான எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர்,

சாதாரணமாகவும், அமைதியாகவும் மற்றும் விளக்கம் தராமலும் இருக்கமுடியாது. அந்தக் குற்றம் நடந்ததற்கு அவர் பொறுப்பானவர் என்பதை எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராகக் காட்டும் வலுவான சூழ்நிலை உள்ளது.

13. அவர், இறந்துபோனவரிடம் சண்டையிட்டுள்ளார் மற்றும் இறந்து போனவரைத் தாக்கியுள்ளார் என்பது குற்றஞ்சாட்டப்பட்டவரின் உள்நோக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. இறந்தபோன மீனா தேவிக்கு மட்டுமே தனது சொத்தை வழங்க விரும்பிய சுவாமியின் நிலம் தொடர்பாக ஒரு பிரச்சனை கூறப்பட்டுள்ளது, அது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏற்புடையதாக இல்லை. 13.08.2007-இல் இறந்துபோனவருக்கு செலுத்த உரியதான நிரந்தர வைப்பீடான ரூ.1,20,000/-ன் மீது இருந்த பேராசை குற்றஞ்சாட்டப்பட்டவரின் மற்றொரு உள்நோக்கத்திற்கான காரணமாகும். மீனா தேவி, எப்போதெல்லாம் அவர் வீட்டிற்கு வருகிறாரோ அப்போதெல்லாம், குற்றஞ்சாட்டப்பட்டவரான ராஜ்குமாரால் தாம் அடையும் துன்பம் குறித்து கூறுவார் என, இறந்துபோனவரின் மைத்துனியான அ.சா-15 பிந்த்ரா தேவி தனது சாட்சியத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் உள்நோக்கம் குறித்து பிந்த்ரா தேவி (அ.சா-15) தெளிவாகக் கூறியுள்ளார். அ.சா-15-ன் சாட்சியத்திலிருந்து குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ் குமார் தொடர் குடிகாரர் என்பது வெளிக்கொணரப்பட்டுள்ளது. ஏற்கனவே, எதிர்மேல்முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவர் மீனா தேவியை அடித்துள்ளார் மற்றும் வருங்காலத்தில் அவரை அடிக்கமாட்டேன் என உறுதியளித்து மீனா தேவியுடன் சமரசம் செய்துள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான உள்நோக்க காரணம், அ.சா-15-ன் சாட்சியம் மூலம் கூறப்பட்டது உயர்நீதிமன்றத்தால் சரிவர பார்க்கப்படவில்லை.

14. 23.08.2007 அன்று இரவு மீனா தேவியை குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கியது குறித்தும், குற்றஞ்சாட்டப்பட்டவரான ஓம் பிரகாஷால் அ.சா-1-க்கு பின்னர் தரப்பட்ட அச்சுறுத்தல் குறித்து ஜீவன் லால் (அ.சா-1) தெளிவாக கூறியுள்ளார். சாட்சிகள் நடந்ததை பார்வையிட்டும் மற்றும் கவனித்தும் உள்ள விசாரணை நீதிமன்றம், ஜீவன் லால் (அ.சா-1) நம்பகத்தன்மையுடைய சாட்சி எனக் கருத்தியுள்ளது. அவ்வாறாக அவரது கூற்றில் உள்ள மாற்றங்களை அ.சா-1-ஆல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் ஜீவன் லால் (அ.சா-1)-ன் கூற்றை ஐயமாக உயர்நீதிமன்றம் கருதியது சரியல்ல. 25.08.2007 நாளிட்ட அவரது வாக்குமூலத்தில் (வ/ம.சா.ஆ.) குற்றஞ்சாட்டப்பட்டவர்களான 2 மற்றும் 3 முறையே ரமேஷ் குமார் மற்றும் ஓம் பிரகாஷின் குற்றப்பங்கு குறித்து ஜீவன் லால் (அ.சா-1) ஏதும் கூறவில்லை. மரத்திலிருந்து தொங்கிய மீனா தேவியின் உடலை கீழே கொண்டுவந்த பிறகு 25.08.2007-இல் பதிவான அவரது வாக்குமூலத்தில் ரமேஷ் குமார் மற்றும் ஓம் பிரகாஷ் பெயர் கூறாத காரணத்திற்காக ஜீவன் லால் (அ.சா-1)-ன் சாட்சியம் சந்தேகப்படக்கூடாது. அந்த நேரத்தில் அ.சா-1 இருந்த சூழ்நிலைகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். அ.சா-1, 19 வயதானவர் மட்டுமே. 236.08.2007 இரவு,அவர் அடிப்பட்டபோது, அவரது தாயாரின் கூக்குரலை அவர் கேட்டுள்ளார். 24.08.2007 முதல் 25.08.2007 வரை, 24 மணி நேரத்திற்கு மேலாக, அ.சா-1 மற்றும் அ.சா-3, மீனா தேவியைத் தேடி, இறந்துபோயுள்ளதை கண்டுள்ளனர். மீனா தேவி ஓடிவிட்டதாக, அனந்த் ராமுக்கு (அ.சா-3) தெரிவிக்குமாறு, அ.சா-1 ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்ட ஓம் பிரகாஷால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். அ.சா-1-ன் வாக்குமூலம் பதியப்பட்டுள்ளது. அவர் விபத்தினால், பயமான மனரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், அவரது வாக்குமூலத்தில் (வ/ம.சா.ஆ.) ஓம் பிரகாஷ் மற்றும் ரமேஷ் குமார் பெயர் கூற

விடுபட்டது, அ.சா-1-ன் சாட்சியத்தை மதிப்பில்லாததாகக் கருத இயலாது. சாட்சியத்தை முறையாகக் கவனித்து, அ.சா-1-ன் சாட்சியம் நீதிமன்றத்தின் நம்பிக்கையை தோற்றுவிக்கிறது என விசாரணை நீதிமன்றம் கருதியுள்ளது. அவ்வாறிருக்க, எங்கள் கருத்துப்படி, அ.சா-1-ன் கூற்று மற்றும் அதன் நம்பகத்தன்மை உயர்நீதிமன்றத்தால் சந்தேகிக்கப்பட்டிருக்க கூடாது.

15. சாட்சியின் சாட்சியத்தைப் பார்க்கும்போது, வழக்கில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில், சாட்சியின் சாட்சியம் முழுவதும் உண்மையாகத் தோன்றுகிறதா என்ற அணுகுமுறை இருத்தல் வேண்டும். ஒருமுறை, அந்த கருத்து உருவானால், சாட்சியத்தில் குறிப்பிடப்படும் குறைகள் மற்றும் பலக்குறைவு ஆகியவற்றை குறிப்பாக கருத்தில் இருத்தி, ஆய்வு செய்து, அரவு வழக்கின் பொதுவான இசைவுக்கெதிராக உள்ளதா எனக்கண்டு மதிப்பிடுவது நீதிமன்றத்திற்கு அவசியம். இறந்துபோன மீனா தேவியின் மகனான ஜீவன் லால் (அ.சா-1) அவருடனும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருடனும் ஒரே வீட்டில் இருந்துள்ளனர் மற்றும் நிகழ்வு குறித்து பேசும் இயல்பான சாட்சியாவர். அ.சா-1-ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாகவும், இயல்பானதாகவும் உள்ளது மற்றும் அரசுத் தரப்பு வழக்குடன் ஒத்துப்போகிறது. சில கூடுதல் விரிவாக்கம் உள்ளது எனக் கருதி, கூறப்பட்ட விரிவாக்கம் காரணமாக அ.சா-1-ன் சாட்சியத்தை உயர்நீதிமன்றம் சந்தேகித்தது சரியல்ல.

16. அமர்வு நீதிபதி சுட்டிக்காட்டியபடி, இறந்துபோன மீனா தேவி கடைசியாக குற்றஞ்சாட்டப்பட்டவரான ராஜ்குமாருடன் உயிருடன் காணப்பட்டார், மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துபோன தேவி காணாமல் போனது குறித்து தெளிவாக விளக்கவில்லை மற்றும் அதுவே குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான மற்றும்

வலுவான சூழ்நிலை ஆகும். அதே வீட்டில் இறந்துபோன மீனா தேவியுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் வசித்து வந்ததால் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் கடைசியில் உயிரோடு பார்த்துள்ளதால், இறந்து போனவர் எவ்விதம் இறந்தார் என்பதை அவர்தான் விளக்க முடியும். இறந்தவரின் உடல் மரத்திலிருந்து தொங்கியது எப்படி என்பது குறித்து எந்த விளக்கமும் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் இல்லை. காசி ராம் என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இறந்தவருக்கு என்ன நேர்ந்தது என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் விளக்க வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் தனக்குத் தெரிந்த உண்மையை விளக்கவில்லை என்றால், எந்தவொரு விளக்கத்தையும் வழங்கத் தவறியது அவருக்கு எதிராக வலுவான போராடும் சூழ்நிலையாக இருக்கும்.

17. ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, கு.ந.ச., பிரிவு 313-ன்கீழ் அவரை வினவியபோது, ஊகத்திற்கான சூழ்நிலையின் சாட்சியத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர், சாதாரணமாக மறுத்து மற்றும் தாம் அறியாதவர் என வாதிட்டார். இறந்தவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்று கூறுவதற்கு எதிர்த்தரப்பினரால் வலுவுற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இறந்துபோன மீனா தேவியின் உள்ளுறுப்புகள் துங்கண்டில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டன. தடய அறிவியல் ஆய்வக அறிக்கையின்படி, இறந்தவரின் உள்ளுறுப்புகளில் விஷம் எதுவும் கண்டறியப்படவில்லை. எங்களின் பரிசீலனையின்படி, விசாரணை நீதிமன்றம் எதிர்த்தரப்பினரின் வாதுரையை நிராகரித்தது சரியானது.

18. ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல், பல தீர்ப்புரைகளில், தண்டனை சூழ்நிலைச் சான்றுகளின்படி இருக்கும்போது, சூழ்நிலைகளின் தொடர் சங்கிலியில் எந்த இடைவெளியும் இருத்தல் கூடாது; குற்றஞ்சாட்டப்பட்டவர் சதேகத்தின் பலனுக்கு

உரியவராவார் என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. தற்போதைய வழக்கில், உறுதியான மற்றும் நம்பத்தகுந்த சாட்சியங்களுடன், அரசுத் தரப்பு சூழ்நிலைகளை நிறுவியுள்ளது:- (i) நோக்கம் (அ.சா-15-ன் சாட்சியம்); (ii) குற்றஞ்சாட்டப்பட்டவர் அடித்துள்ளார் மற்றும் அவரை அழைத்துச் சென்றுள்ளார் (அ.சா-1-ன் சாட்சியம்); (iii) மீனா தேவியின் மரணம் விளைவிக்கப்பட்ட மரணம் (அ.சா-24-ன் சாட்சியம்); (iv) இறந்துபோன மீனா தேவி குறித்து காவல்துறைக்கு தெரிவிக்காத குற்றஞ்சாட்டப்பட்டவரின் நடத்தை (v) இறந்துபோனவரின் இறப்புக்கு குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து சரியான விளக்கம் இல்லாமை. அரசுத் தரப்பு சார்ந்திருக்கும் சூழ்நிலைகள் உறுதியான மற்றும் நம்பகமான ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த கொலை குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் செய்யப்பட்டது, வேறு யாரும் செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டும் சூழ்நிலைகள் ஒட்டுமொத்தமாக ஒரு முழுமையான சங்கிலித் தொடரை உருவாக்குகின்றன.

19. மேல்முறையீட்டில், அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும், சாட்சியங்களின் உள்ளார்ந்த மதிப்பையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக அரசுத் தரப்பு நிறுவிய கடுமையான சூழ்நிலைகளையும் உயர் நீதிமன்றம் சரியாக மதிப்பிடவில்லை. ஜீவன் லால் (அ.சா-1)-ன் நம்பத்தகுந்த சாட்சியத்தை கட்டற்ற ஐயப்பாட்டினால், உயர்நீதிமன்றம் மறுத்துரைத்தது. ஆதாரங்கள் தவறாக மதிப்பிடப்பட்டதால், உயர் நீதிமன்றம் தண்டனையை நீக்கறவு செய்து நீதியின் தோல்வியை ஏற்படுத்திவிட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதற்கான உயர்நீதிமன்றத்தின் காரணங்கள் நிலைக்கத்தக்கதல்ல மற்றும் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பை நிலைநிறுத்த முடியாது.

20. இதன் விளைவாக, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றத்தால், இ.த.ச., பிரிவு 302-ன்கீழ் எதிர்மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனையும், ஆயுள் தண்டனையும் உறுதி செய்யப்படுகிறது. மீதமுள்ள தண்டனையை அனுபவிக்க எதிர்மேல்முறையீட்டாளர் காவலில் வைக்கப்படவேண்டும்.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".